செய்தி வெளியீடு எண் :11 நாள் :04.10.2019

**தேனி மாவட்டம்,**
**பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த தினத்தை சிறப்பிக்கும் வகையில் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கான விரைவு மிதி வண்டி போட்டியினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார்:-**

*****

தேனி மாவட்ட விளையாட்டு அரங்கில், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் மாண்புமிகு முன்னாள் முதல்வர் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த தினத்தை சிறப்பிக்கும் வகையில் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கான விரைவு மிதி வண்டி போட்டியினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் இன்று (04.10.2019) கொடியசைத்து துவக்கி வைத்து, போட்டியில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களை பாராட்டி பாராட்டு சான்றிதழ்களை வழங்கினார்.

மாண்புமிகு முன்னாள் முதல்வர் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த தினத்தை சிறப்பிக்கும் வகையில் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கான நடைபெற்ற விரைவு மிதி வண்டி போட்டியில் 81 மாணவர்கள், 57 மாணவிகள் என மொத்தம் 138 மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டார்கள்.

மேலும், மாணவர்களுக்கான 13-வயதிற்குட்பட்டவர்களுக்கான பிரிவில் அல்லிநகரம் அரசு மேல்நிலைப்பள்ளியில் பயிலும் மாணவன் ஆர்.ரகுமான் முதலிடத்தினையும், தேனி வேலம்மாள் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் பயிலும் மாணவன் எஸ்.சுதர்சன் இரண்டாமிடத்தினையும், தேனி லிட்டில் கிங்டம் பள்ளியில் பயிலும் மாணவன் ஆர்.ஜெய்ஜஸ்வந்த் மூன்றாமிடத்தினையும், 15-வயதிற்குட்பட்டவர்களுக்கான பிரிவில் தேனி கொண்டுராஜா நினைவு மேல்நிலைப்பள்ளியில் பயிலும் மாணவர்கள் எஸ்.சுருதீஸ் முதலிடத்தினையும், வி.ஆதித்யன் இரண்டாமிடத்தினையும், அல்லிநகரம் அரசு மேல்நிலைப்பள்ளியில் ஆர்.புவனேஷ் மூன்றாமிடத்தினையும், 17-வயதிற்குட்பட்டவர்களுக்கான் பிரிவில் மயிலாடும்பாறை ஜி.ஆர்.வி மேல்நிலைப்பள்ளியில் பயிலும் மாணவன் ஏ.சூர்யா முதலிடத்தினையும், அல்லிநகரம் அரசு மேல்நிலைப்பள்ளியில் பயிலும் மாணவன் பி.சௌந்திரபாண்டி இரண்டாமிடத்தினையும், அல்லிநகரம் அரசு மேல்நிலைப்பள்ளியில் பயிலும் மாணவன் என்.விக்ராந்த் மூன்றாமிடத்தினையும் பெற்றனர்.

இதே போன்று, மாணவியர்கள் 13-வயதிற்குட்பட்டவர்களுக்கான பிரிவில் பழனிசெட்டிபட்டி பழனியப்பா நினைவு மேல்நிலைப்பள்ளியில் பயிலும் மாணவி ஆர்.பிரித்தி முதலிடத்தினையும், தேனி பிரசன்டேசன் காண்வெண்ட் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் பயிலும் மாணவிகள் எம்.கனிமொழி இரண்டாமிடத்தினையும், எம்.பிரியா மூன்றாமிடத்தினையும், 15-வயதிற்குட்பட்டவர்களுக்கான பிரிவில் தேனி பிரசன்டேசன் காண்வெண்ட் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் பயிலும் மாணவிகள் கனிஷ்காவர்ஷ்னி முதலிடத்தினையும், பி.ராஜமதுமதிதா இரண்டாமிடத்தினையும், மேலசொக்கநாதபுரம் அரசு மேல்நிலைப்பள்ளியில் பயிலும் மாணவி பி.யமுனா மூன்றாமிடத்தினையும், 17-வயதிற்குட்பட்டவர்களுக்கான பிரிவில் தேனி பிரசன்டேசன் காண்வெண்ட் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் பயிலும் மாணவி ஆர்.தீதபாராணி முதலிடத்தினையும், பழனிசெட்டிபட்டி பழனியப்பா நினைவு மேல்நிலைப்பள்ளியில் பயிலும் மாணவி எம்.கயல்விழி இரண்டாமிடத்தினையும், தேனி பிரசன்டேசன் காண்வெண்ட் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் பயிலும் மாணவி ஆர்.சசிமீனா மூன்றாடமிடத்தினையும் பெற்றனர்.

இந்நிகழ்வின் போது, மாவட்ட விளையாட்டு அலுவலர் கா.சுப்புராஜ், விளையாட்டு அலுவலர்கள், மாணவ, மாணவியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**